

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்

அருளிச்செய்த

பரமபத ஸோபாநம்.

என்னும்

ரஹஸ்யம்

[பர்வங்களின் முன்பின் பாசுரங்களுக்கு

வியாக்கியானத்துடன் கூடியது.]

1924. [6-அணா.

Dr. Vraughan ...

01-6-99

Presented to

(140)

Mr Lakshmi Varaha Iyengar.

[signature]

140

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்

அருளிச்செய்த

பரமபத ஸோபாநம்.

என்னும்

ரஹஸ்யம்

[பர்வங்களின் முன்பின் பாசுரங்களுக்கு

வியாக்கியானத்துடன் கூடியது.]

Paramapatha Sopanam
by V. Desika

சின்னமு. ரெ. ஸ்ரீநிவாஸபாட்டராசாரியரால்

Pub. Srinivasa Bhattacharya

கும்பகோணம்.

ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்ஸில்,

அச்சிடப்பட்டது.

ரக்தாக்ஷ-௵ ஆவணி-௴

(1924 ஆகஸ்ட்-௴)

Kumbakonam

॥ श्रीः ॥



श्रीमान्वेंकटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥



ஶ்ரீ: ॥

ஶ்ரீலக்ஷ்மீஹயவதந பரப்ரஹ்மணே நம: ॥

ஶ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

ஶ்ரீமதே நிகமாந்தமஹாகுரவே நம: ॥

பரமபதஸோபாநம்,

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் ।
ஶ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஶிகம் ॥
லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் ।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

வ்யாஜீக்ருத்ய விமுக்திஸாதநவிதீந்ஸோபாநஸம்வர்ணநம்
ஶாரீரார்ணவரத்நஜாதமிஹ ய: ப்ராசீகஶத்தத்த்வஶ: ।
தஸ்மிந் திஷ்டதி வேங்கடேஶ்வரகவௌ ஶ்ரீபாஷ்யகாரோபமே
யங்கஞ்சித்புருஷம் ஹ்ருதாவாஸிதமயேமாகாமந:ஸ்வஸ்திதே ॥
தஸ்மை நமோऽஸ்து குரவே தாத்ருஶவிபவாய வேங்கடேஶாய ।
ப்ராபத்யஜ்ஞாநாநாம் தத்மௌள பரமபதஸம்ப்ரஸோபாநம் ॥

தேனேறு தாமரையாள் திருமார்பன்றன் திண்ணருளாலவ
னடியில் விவேகம்பெற்றுக், கூனேறுபவக்குழியைவெறுத்ததற்
பின் கூர்விரத்தியுடன் வினையின்திரளுக்கஞ்சிக், கூனேறுபிறை
யிறையோன் சாபந்தீர்த்தான்குரைகழலேசரணடைந்து குரம்
பைவிட்டு, வானேறும்வழிப்படிக ளடவேகண்ட வண்புகழ்
தூப்புல்வள்ளலருள்பெற்றோமே. (க)

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளேசரணம்.

ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥

ப்ரதமம் விவேகபர்வ ॥

ஶ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥
ஸேயம் ஸோபாநபத்ததீ ஶ்ரீமதா விஹிதா ஸ்வயம் ।
ஶங்கஸ்த்வயம் ஹ்ருத்யாந்து ஸ்வஸாம்யம் நேதுமர்ஹிதா ॥

விவேகநிர்வேதவிரக்திபீதய: ப்ரஸாத ஹேதூத்க்ரமணார்சிராதய: । ப்ரக்ருத்யதிக்ராந்தபதாதிரோஹணம் பராப்திரித்யத்ர து பர்வணாம் க்ரம: ॥

அடற்புள்ளரசிலுமந்தணர்மாட்டிலுமின்னமுதக்
கடற்பள்ளிதன்னிலுங்காவிரியுள்ள * முகந்தபிரான்
இடைப்பிள்ளையாகியுரைத்ததுரைக்குமெதிவானர்
மடைப்பள்ளிவந்தமணமெங்கள்வார்த்தையுண்மன்னியதே()

பாசுரங்களின் வ்யாக்யாநம்.

(அடற்புள் இத்யாதி) அடல் - பராக்ரமம், அதனையுடைத்தான, புள்ளரசிலும் - கருடனைக்காட்டிலும், அந்தணர் - ப்ராம்மணோத்தமர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய, மாட்டிலும் - ஸமீபத்திலும், மாடு - ஸமீபம். இதனால் இவர்கள் கோஷ்டியைக்காட்டுகிறது, 'வஸந்திவைஷ்ணவா யத்ர'என்று பகவந்நிரதிசய ப்ரீதிவிஷயமிறே. இக்கோஷ்டியைக் காட்டிலு மென்றபடி. இன் - போக்யமான, அமுதக்கடல் - அமுதம் பிறந்த கடல், க்ஷீராப்தி, அதாகிற பள்ளிதன்னிலும் படுக்கையிலும், பாற்கடலும் வேங்கடமும், "திருப்பாற்கடலே யென்தலையேயொருமா கொடியும் பிரியானெ"ன்று மிகவும் பகவதபிமதமிறே. இதைக்காட்டிலும், காவிரியுள்ள முகந்தபிரான் - திருக்காவேரியினுடைய மத்யமான ஸ்ரீரங்கத்தை யுகந்தருளின பரமோதாரனான ஸ்ரீய:பதி, "கங்கையிற் புனிதமாயகாவிரி நடுவுபாட்டு."காவிரியுள்ள முகந்தவனுடைய பரமோதாரத்வமாவது— அஸ்மதாதிகளுக்கும் முகங்கொடுத்து ரக்ஷிக்கை. இப்படி திருக்காவிரி மத்யத்தை யுகந்தருளின ஸர்வேஸ்வரன், இடைப்பிள்

---

* காவிரியுள்ளும் என்றும் பாடம். அதில், திருவரங்கத்தைப்புள்ளரசு முதலானவர்களோடு ஸமமாகக்கூறியபடி.

கள்ளமனத்துடன்கண்டுமுயன்றகடுவினையால்
நள்ளிருளாழியினற்சுவையைந்தெனநாடியதோர்
அள்ளலினாளும்விழுந்தழியாவகையாரணநூல்
வள்ளல்வழங்கியவான்படியானவழியிதுவே.   (உ)

ஊனயாகி ஸ்ரீக்ருஷ்ணனாயவதரித்து, உரைத்தது - அருளிச்செய்த ஸ்ரீகீதையை, உரைக்கும் - வ்யாக்யாநம் பண்ணியருளின, எதிவாஞர்-எம்பெருமானாருடைய, மடைப்பள்ளிவந்தமணம்-மாஹாநஸிகரானகிடாம்பியாச்சான் திருவம்சத்தில் ஸம்ப்ரதாயாவிச்சேதேந ப்ராப்தமான பரிமளம், அதாவது எம்பெருமானார் கிடாம்பியாச்சானுக்கு ப்ரஸாதித்து அவ்வழியாலே அப்புள்ளாருக்குப் ப்ராப்தமான ஸத்ஸம்ப்ரதாயஸித்த ரஹஸ்யார்த்த விசேஷங்களென்றபடி. எங்கள்வார்த்தையுள்-தத்சிஷ்யவர்க்கமான அஸ்மத்ப்ரபந்தங்களில், மன்னியதே - ஸ்திரமாய் விளங்காநின்றது. பூர்வமறியாத தங்களுடைய வார்த்தைகளில் எம்பெருமானார் ஸம்ப்ரதாயகந்தம் பரிமளிக்கும்படியாயிற்று தாம் திருந்தினபடி, இதென்னவாச்சரியமோ? வென்று விஸ்மயிக்கிறார்.   (க)

(கள்ளமனத்துடனித்யாதி)மனஸ்ஸுக்குக் கள்ளமாவது அஹங்கார மமகாராதிகள். அதனால் கண்டு - கள்ளமனஸ்ஸால் தத்துவங்களை விபரீதங்களாகவிசாரித்து, அதாவது தன்னை ஸ்வதந்த்ரனாகவும் பரமாத்மாவை யில்லையாகவும் புத்திபண்ணி, முயன்ற கடுவினையால் - ஆரம்பிக்கப்பட்ட க்ரூர பாபங்களால், நள்ளிருளாழியில் - காடாஜ்ஞாநாந்தகாரசக்ரத்தில், ஐந்து- அல்ப ஸா ரங்களான சப்தாதிவிஷயங்களைந்தும்,நல்சுவையென, ஆத்மோபபோக்யமான நல்லரஸங்களென்று ப்ரமித்து, நாடியது - தேடப்படுமதான, ஓரள்ளலில்- சப்தாதிவிஷயங்களாகிற அத்விதீயமானமஹாபங்கஹ்ருதத்தில்,அள்ளல்-சேற்றுடை, நாளும் விழுந்தழியாவகை-ஸர்வகாலமும் நிபதித்து நசியாஸிதம், ஆத்மஸ்வரூபமழிந்துபோகாதபடி, பகவதனுபவமே ஆத்மாவுக்கு ஸத்தாபாதகமாகையால் சப்தாத்யனுபவமாத்மாவுக்கு விநாசபர்யாயமிறே. ஆரணநூல்வள்ளல்-உபநிஷத்சாஸ்திரத்தால் ப்ரதிபாதிக்கப்பட்ட பரமோதாரனை ஶ்ரிய:பதி, யத்வா - ஆரணநூல்வள்ளல் - பரமோதாரமான உபநிஷத்துக்கள். அவற்றிற்கு பரமோதாரத்வமாவது பகவத்ஸ்வரூபாதிகளை ஸ்பஷ்டமாக ப்ரதிபாதிக்கை. அதவா - ஆரணநூல்-உபநிஷத்துக்களாலும், வள்ளல், பரமோதாரனான க்ருஷ்ணனாலும், வழங்கிய - உபகரிக்கப்படுவதான, சொல்லப்படுவதான. “அக்நிர்ஜ்யோதிரஹஶ்ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம் । தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா:” என்று கீதையிலும். “தேऽர்சிஷமபிஸம்

அஶேஷசிதசித்வஸ்துஶேஷியான ஶ்ரிய:பதிக்கு அநந்யார்ஹநிரவதிகஶேஷபூதராய், அந்தமில்பேரின் பத்தடியரோடிருந்து அனைத்துலகுமுடையவரவிந்தலோசனனைத் தினைத்தனையும்விடாதே அநுபவிக்க ப்ராப்தரான க்ஷேத்ரஜ்ஞர், அநாத்யவித்யாகர்மாதிப்ரவாஹத்திலொழுகிக் கரையேற விரகற்று அலமருகின்றபடியைக்கண்டருளின பரமகாருணிகனான பரமஶேஷி, தானே ஜ்ஞாநக்கை கொடுத்து இவர்களையெடுக்கவிடம் பார்த்து அஜ்ஞாதயாத்ருச்சிகாநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமாந்ய பாஹ்யஸுக்ருதவிஶேஷங்களை வ்யாஜமாகக்கொண்டு விஶேஷகடாக்ஷம் பண்ணி, அத்வேஷாபிமுக்யஸாத்த்விக ஸம்பாஷணாதிகளையுண்டாக்கி, ஸாதாரணநித்யஸம்பந்தஸஹகாரியான ஆசார்யஸம்பந்தத்தை அபிஸந்திபண்ணி, விஶேஷண விஶேஷ்யாஶ்ரயஸ்வபாவவிஷயமாகத் திருந்தக்கண்டுரைக்கவல்ல தெளிவுற்றசிந்தையனாய் ஸர்வஜ்ஞஸர்வநிவ்ருத்தனான தேஶிகனான தேஶிகன் திருவடிகளிலே சேர்த்து, அவன் மநஸ்ஸிலும் வாக்கிலும் கோயில்கொண்டு பிரமகுருவாகிநின்று தீதில்நன்னெறி காட்டவொருப்பட்டு ஶாஸ்த்ரஜீவநாபேக்ஷிதங்களான ரஹஸ்யஶாஸ்த்ரார்த்தங்களை அஜ்ஞாநஸம்ஶயவிபர்யயவிபரீதார்த்திகள் புகாதபடி உபதேஶிக்க; 'உபதேஶோ நிரயந்த்ரக:' என்றபடி கருவிலேதிருவுடையனாய் ஸத்த்வஸ்தனாய் 'ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்' என்று செவிதாழ்த்திச் சேதனன் 'சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்தமுடிவில்பெரும்பாழி'லெழுந்த மானாங்காரமனங்கள் முதலான விவிதவிஷவ்ருக்ஷங்களினுடைய

பவந்த்யர்சிஷோஹ்ந ஆபூர்யமாணபக்ஷம்'' இத்யாதி உபநிஷத்துக்களிலும் காணப்பட்டதிறே. வான்பதியானவழி-பரமபத ஸௌதாரோஹணத்திற்குப்படியான அர்ச்சிராதிமார்க்கம், இதுவே-இப்பிரபந்தத்தில் காட்டப்பட்ட விவேகாதி நவபர்வரூபமான விதுவே, மற்றொன்றல்ல. யத்வா, இப்ரபந்தத்தில் காட்டப்பட்ட விவேகாதி நவஸோபாந பூஷிதமார்க்கமே உபநிஷத்துக்களாலும் தத்ப்ரதிபாத்யனான க்ருஷ்ணனாலுங்காட்டப்பட்ட மார்க்கமென்கை. (உ)

ஸஹஸ்ரப்ரகாரவைலக்ஷண்யத்தையும், ‘சூழ்ந்ததனில்பெரியபரநன் மலர்ச்சோதி’யான ஜீவாத்மாக்களுடைய ஶரீரகாராக்ருஹநிவாஸகைங்கர்யஸாம்ராஜ்யதேஶகளையும், ‘சூழ்ந்ததனில் பெரிய சுடர் ஞானவின்பமான உயர்வறவுயர்நலமுடையவன்’ படிகளையும் அவஹிதனாய்க்கேட்டு, ‘உய்வதோர்பொருளாலுணர்வெனும்பெரும் பதந்தெரிந்து’ ஸ்வரூபஸ்வபாவஸம்பந்தஜ்ஞானப்ரதானமாய் ஶேஷ ஶேஷிகளைப்பிரியாதபடி பிணைத்து வணக்கி உஜ்ஜ்வலிதமாக்குகிற ஸஹ்ருதயத்திலே தன்னுடையஜ்ஞாதவ்யத்வதத்வப்ராப்யத்வங் களை ஸாத்யங்களாகவும் ஸாதனங்களாகவும் பார்த்து, முதற் றனிவித்தாய்த்திருத்தித், திண்ணிலைமூவுலகுந்தன்னுளிருத்திக்கா க்குமியல்பினனாய்த், தனதேயுலகென நிற்குமவனாய், அடைக்கலங் கொண்டஞ்சலென்ன ப்ராப்தனாய், உலகங்களுக்கெல்லாமோருயிராய் உலகுதன்னோடொன்றிநிற்கவேறுநிற்குமவனாய், உபாயோபேய ஸித்தனான ஸ்ரியஃபதியை யுளனென்று தேறியிருக்குமுணர்ச்சி யுடையவன் தானுமுளனென்று தைத்திரீயாதிஶ்ருதிகள் சொல்லலுற்றன.

அருவுருவானவையனைத்து மறிவாரேலு மருங்கலைகள் கற் றுரைக்கவல்லாரேலும், தருமவழியழியாமற்காப்பாரேலுந்தனி மறையின்றூற்பரியந்தருவாரேலும், இருவினையினெழுக்கத்தா லேவலோரா திங்கேநாஞ் சிறையிருந்தவினந்தீர்க்கும், திருமக ளார்பிரியாத தேவன்றிண்ணந்தேறுதார்திண்படியிலேறுதாரே.

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய

ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஸ்ரீபரமபதஸோபானே ப்ரதமம் விவேகபர்வ.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாகுரவே நம: ॥

(வ்-ம்.) (அருவுருவானவை இத்யாதி) இதில் ஸகலஶாஸ்த்ர பரிஜ்ஞான முள்ளவர்களேயாகிலும், ஸர்வரக்ஷகனை ஶ்ரிய:பதியினுடைய ஸ்வாபாவிகாநவதிகாதிஶயைஶ்வர்யத்தை யறியாதார் மோக்ஷ மார்க்க பஹிர்பூதரென்கிறார். அருவுருவானவை-ஸூக்ஷ்ம ஸ்தூலரூபங்

த்விதீயம் நிர்வேதபர்வ ||

மறுத்தார் திருவுடன் மார்பிற்றரித்தவன் வாசகத்தை
மறுத்தார் மயக்கமுமற்றதனுல் வந்தமாகருகும்
நிறுத்தார் பவத்தினெடுநாளுழன்றமைகண்டதனுல்
வெறுத்தாரணநெறியேவெள்கியோடவிரைவர்களே. (ச)

களான விஷயங்கள், அவையாவன, “ஸர்கஶ்ச ப்ரதிஸர்கஶ்ச வம்ஶோ மந்வந்தராணி ச | வம்ஶாநுசரிதஞ்சைவ” என்றும் “உத்பத்திம் ப்ரளயஞ்சைவ பூதாநாமாகதிம் கதிம் | வேத்தி வித்யாமவித்யாஞ்ச” என்றும் சொல்லப்பட்ட தத்தத்ஶாஸ்த்ர தாத்பர்யார்த்தங்கள், அனைத்தும் - ஸமஸ்தத்தையும், அறிவாரேலும் - அறிந்தவர்களானுலும், ஸர்வ சாஸ்த்ரதத்வஜ்ஞராகிலுமென்றபடி. அரும்- அர்த்தமறிகைக்கும் அனுஷ்டிக்கைக்கும் அருமையான, கலைகள் - வேதசாஸ்த்ராதி சதுஷ்ஷஷ்டி கலைகள், கற்று - தாங்கள் நன்ருக அப்யஸித்து, உரைக்க - ஆச்ரிதருக்கும் உபதேசிக்கவும் வல்லாரேலும், ஸமர்த்தராஞராகிலும், தருமவழி யழியாமல் காப்பாரேலும் - ஶ்ருதிஸ்ம்ருத்யுக்த நித்யநைமித்திகதர்மங்களை ஸம்ப்ரதாயவிச்சேதத்தாலழிந்துபோகாதே தாங்களுமனுஷ்டித்து அடைந்தவர்களையுமநுஷ்டிப்பித்து ரக்ஷிக்க சக்தராகிலும், தனிமறையின் - வேதாந்தத்தின் தாற்பரியம் - தாத்பர்யார்த்தங்களைத் தருவாரேலும், தாங்களிதிலொப்பற்றுப் பிறர்க்குபதேசிப்பாருள்ளார் சிலரானபோதிலும். இருவினை - அனுதி புண்யபாபரூபகர்ம்மவிசேஷத்தினுடைய, ஒழுக்கம்-ப்ரவாஹம், அதனுல், ஏவல்-ஸ்வரூபாநுரூப பகவத் கைங்கர்யம். அதனை, ஓராது-எண்ணுது, ஆசைப்படாதே யென்றபடி. இங்கே நாம் சிறையிருந்தானந்தீர்க்கும் - இந்த ஸம்ஸாரத்திலே நாம சிறையிருந்த-பத்தராயிருந்த ஹீநதையைத்தீர்க்குமவனுன, நிதயஸம ஸாரிகளை நித்யஸூரிபதத்திலே வைக்கும் அகடிதகடனுஸமர்த்தனிறே பகவான். திருமகளார் பிரியாத தேவன்-ஸர்வாவஸ்தையிலும் பெரிய பிராட்டியாரைப் பிரியாத ஸ்ரீமந்நாராயணனுடைய, திண்ணம். நிருபாதிகநித்யஜகதீசித்ருத்வரூபத்ருடத்வத்தை, தேருதார் -“ந த்வேஷ்டி வேத்தி க: க:” என்கிறபடியேயிசையவேண்டுவதையிசையாதார், விச்வஸியாதாரென்றபடி. திண்படியில்-த்ருடமான மோக்ஷமார்க்கமாண பரமபதஸோபானத்தில், எருதார்-மோக்ஷமார்க்கபஹிர்பூதரென்கை (ரூ)

(மறுத்தாரித்யாதி) ஶ்ரிய:பதியினுடைய ஆஜ்ஞாதிலங்கிகள் அநாதி காலமெல்லாம் ஸம்ஸாரத்திலுழன்றமை கண்டவர்கள், இந்த ஸம்ஸா

இப்படி தானும் பிறரும் தனக்கு ஶேஷியும் தஞ்சமும் ஸௌ
ஹ்ருதமுமன்றென்று தோன்றும்படி அநாதிமாயாவேஶிதகேவல
ஸஞ்சிதகர்மப்ரவாஹத்தாலே திவ்யஜ்ஞானம்போலே
ப்ரஸந்நமாய்வரவிச்சிந்நமான பராவர தத்த்வவிவேகம்பெற்
றவன், தான் முன்பு அநாதிகாலஸம்ஸாரஜன்படியே நடக்கையா
லே 'அந்தகோஹம், க்ஷீவோஹம்' என்னும்படி துறப்புண்டு, அந்தகாரே
விஸ்த்ருதமான தீர்க்காணவாந்தகாரத்திலே அநேகஜந்மஸாஹ
ஸ்ரியான ஸம்ஸாரவநவீதியையடைந்து, அநர்த்தவிஷயப்ரேம
த்ருஷ்ணாஸ்வாதரூபனாய், அடிதெரியாதேயோடி வாஸநாரோ
ணாகர்ணிதனாய், விபரீதவிப்ரலம்பனாய், ஒரு விஶ்ரம்பஸ்தா
நமும் பெறாதே, ஸ்வாகதகாலராத்ரிகள் வந்தாலும் முன்பு ஸர்
வஸ்வமான ப்ரஸ்ருதையான ப்ரஜ்ஞையிழந்து மூச்சடங்க ப்ரஸர்வ
னாய், ஹோமகோக்ஷாதிப்ரவ்ருத்திகளுக்கு ப்ரஸங்கமில்லாதபடி
கரணகளேபரங்களையிழந்து 'ஸம்ப்ரநஷ்டவர்ணஜ:' என்
னும்படியாய், தனக்கு விஶேஷித்தொருபேரிடவொண்ணாதபடி

ரத்தை வெறுத்து ஔபநிஷதமார்க்கத்திலிழியப்பார்ப்பர்களென்கிறார்.
மறுத்தார் - மறுவையும் தாரையும், அதாவது ஸ்ரீவத்ஸமென்கிற மறு
வையும் வைஜயந்தி யென்கிற மாலையையும், திருவுடன் - திருமாதுடன்,
பிராட்டியோடேகூட, மார்பில் தரித்தவனை கண்ணனுடைய, வாசகத்
தை - "பஜஸ்வ மாம்" என்றும், "மாமேகம் சரணம் வ்ரஜ" என்றும்சொ
ன்ன வசநங்களை, மறுத்தார் - அதிக்ரமித்தவர்கள்; பக்தி ப்ரபத்தியிலி
ழியாத பாவிகளென்றபடி. அவர்களுடைய மயக்கம்- அவித்யை, இது
கர்மவாஸநாதிகளுக்குமுபலக்ஷணம். மற்றதனல் வந்தமாநரகும்-மற்று-
அன்றியும், அதனல் - அந்த அவித்யாதிகளால், வந்த - ப்ராப்தமான,
மற்றுமுண்டானமஹாநரகாத்யநுபவங்களையும். நிறுத்து-நிறுத்துமதாய்
தன்னுள்ளே நிறுத்தியகப்படுத்திக்கொள்ளுமதான, ஆர் பவத்தில்-அதி
விஸ்த்ருதமான ஸம்ஸாரத்தில், நெடுநாள்-அநேககாலம், உழன்றமை-
பரிப்ரமித்தபடியையும், கண்டு - கண்டாற்போலே பராமர்சித்து, அத
னல், வெறுத்து-நிர்வேதம்பிறந்து, இருப்பவரென்று அத்யாஹார்யம்.
நிர்வேதம்பிறந்தவர்களென்றபடி. வெள்கி - கீழ்பரிப்ராமித்ததற்கு லஜ்
ஜித்து, மேல், ஆரணநெறியே-ஔபநிஷதமான பக்திப்ரபத்திமார்க்கத்
திலே, ஓடவிரைவர்கள் - சீக்ரமாக இழியவுத்யோகிப்பார்களென்கை.

தமஸ்ஸிலே யிருப்புண்டநீர்போலே யிறுகச்சுவறி, ஒருமூலை யிலே "ஸம்ஹாரவிக்ஷேபஸஹஸ்ரகோடீஸ்திஷ்டந்தி ஜீவா:" என் னும்படி ஆயிரங்கோடி ப்ரஹ்மதுக்கங்களடைப்புண்டு கிடக்கும்படி களையும், மீண்டு ஶரீரகாரணிகஸ்ருஷ்டிஸம்பந்தவிஶே ஷநியதகாலம் வந்தால் "ஸ்வயம்பூர்வாதி" என்னும்படி. ஶாஸ் த்ரவழியே போந்து ஶரீரஸம்பந்தவிஶேஷநிவேதநமே யான விவிக்தஸம்பந்தியைப் பெற்றாலும் ஆக்கையின் வழியுழல் வேனென்று, நீ ஸ்வதந்த்ரனென்றால் ஓமென்றிசையாதே யம கிங்கரர்க்கிடமாம்படி இந்த்ரியகிங்கரராய்ப்போந்த படிகளையும், தெரிந்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித் தும்பொழுது போக்க ப்ராப்தமாயிருக்க, சூதினைப்பெருக்கிக்கள வினைத்துணிந்து சுரிகுழன்மடந்தையர்திறத்துக்காதலேமிகுத்தும் வென்றியே வேண்டிவீழ்பொருட்கிரங்கிவேற்கணார்கலவியேகருதி புலன்படிந்துண்ணும் போகமேபெருக்கிப் பொழுதினை வாளாப் போக்கின படிகளையும், ஸ்வதந்த்ரஸ்வவி(ஶ்லேஷா)ஶ்லேஷாதிகளில் 'ஸாஹம்' என்று இழவுபட்டு தஸ்யாதேஶதஶையிலனைப்போலே கூப்பிடவேண்டியிருக்க, "தாயொருபக்கந் தந்தையொருபக்கம்" இத்யாதிகளிற்படியே சப்தாதிவிஷயவிஶ்லேஷத்தில் அலற்றும் படிகளையும், நிற்கின்றதெல்லாமுடன்மிசையுயிரெனக்கரந்த நெடு மாலென்று ஓர்ந்து ஶ்ருதிஶ்ருதயேயற்று 'யஸ்ய: ஸர்வ'என் கிற ந்யாயத்தாலே ஸர்வபூததயை யுபிதமாயிருக்க அறப்பொருளை யறிந்தோராதே மறுக்கிவல்வலைப்படுத்திக் குமைத் திட்டுப் பல்லுயிரைக் கொன்றுண்ணும்படிகளையும், ஸாத்விக்த்ர ஷாஸ்த்ரத்தை சுவஶமாகவாகிலுமுபஸித்து ஶரீரவிநாஶநத் துக்கு வஶிகரமானம் பண்ணுகையே வர்ணதக்ருத்யமாயிருக்க, ப்ரஹ்மக்ஷ நியந்தாநுஷ்டாநத்திலுமுண்டறுக்கவொண்ணுதபடி க்ஷயாஶ்மமான சுவதாரவத்தை க்ஷணாயரோதாந்தோ றும் நடத்திப்போந்தபடிகளையும், முன்னடப்பைப் புரிந்துபார்த்து 'வாடினேன்வாடி-வாணிலாமுறுவல்-தாயேதந்தை' இத்யாதிகளில் படியே வஸ்ராத்தாவம்பிறந்து, பழுதே பலபகலும் போயின

வென்று அஞ்சியழ ஆராவமாயிருக்க, ஆகூ௫திவெதாஸவாரவஸ ருய், ‘காவு௦ஷதஷவ-ஜவாநு’ என்னும்படி கலங்கிக்கண்டவாறு திரிந்தபடிகளையுங்கண்டு, ‘‘சுஹொ ஷ ஜஹதீ யாதா திஷா ஜநு ஸதிஃ’’ ‘யானே யென்னை யறியகிலாதே, யானேயென்ற னதே யென்றிருந்தேன், நானே நானாவிதநரகம்புகும் பாவஞ்செய் தேன், அருநரகத்தழுந்தும் பயன் படைத்தேன், நஸஷிதாவஷி ஜஸாநி ஷொகெ ஸி௦ஹொந ஸ-ஞ்க்ஷா பஹவெ யாதாஃ’’ ஐ தூரஷிவஸிஷெவநங்களைப் பண்ணும்படி முன்பு ஸாகவிகஸ௦ஹா ஷணாஷிகளாலே முகிழ்த்த நிவெ-ஜம் நஷஸ்ரூபநிஷெஷநி ஈ-ஞவணத்தாலே முற்றி, செய்யாதனசெய்யோம், நயவேன்பிறர் பொருளை நள்ளேன் கிழாரோடென்னும்படி, செய்யேல் தீவினை யென்றருள்செய்யும் கையார் சக்கரக்கண்ணபிரான் சுந-ஷதிபண் ணுதவழிகளில் ஆவஜெஸயிலுமடியிட நடுங்கும்படியாம். ௦ஈ௦ ஷ-ஜூாஷிகளாலே நிவெ-ஜ௦ பிறக்குமாகில் அதுமேலும் விவ ரீதவூதங்களிலே கைவளரப்பண்ணும். சுநாஷிஷாயாநிஜெது யாலே உறங்கினவனுக்கு உணர்த்தியாலே நிவெ-ஜம் பிறந்தால் இது ப௦ஹவ-ஜாஷிகளான ஆஸ-ஈஸூஹாவங்களை யடியறுத்து சுஷாமிகூாஷிகளான ஆதுஹ-ணங்களோடே சுவிநாஹ-ஞதமாய் சுவவஹ-ஜஸாயநாயிகாரியாக்கும். ஆனபின்பு சுகூதூவாரு வஸாயியானசுதூஜஸஷொஷத்திலுமாழங்கால்படாதே, ஸவ- காரூாவஸாஜகமான சுதூஜநிவெ-ஜத்திலுமிழியாதே ஸாதிக கயூதியைக் கைப்பிடித்து நிஷிஜவூவாஹத்தை விலக்குகை நிஸூவிவெகவ-ஞவ-நிவெ-ஜஹெவு.

வான்பட்ட மன்னிருளின் மயங்குமாறு மறித்தொருகா லென்னையூழிசென்றுலன்றோர், ஊன்பட்டவுடலாழிவினையொழிக்

(வான்பட்டவித்யாதி) அநாதிகாலம் தாங்கள் பட்டபாட்டைச் சாஸ் த்ரமுகத்தாலே தெளிந்தவர்கள் மேல் நல்வழியே நடக்க உத்யோகிப் பார்களென்கிறாரிப்பாட்டிலும். வான் - ஆகாசம், இதனால் சிரஸ்தா யித்வத்தைக் குறிக்கிறது. பட்ட - சிரஸ்தாயித்வத்தை யடைந்த, மன் னிருளில் - ப்ராக்ருதப்ரளயமான மஹாந்தகாரத்திலென்றபடி. மயங்கு

கிலொருகரையுங்காணுதே யொழுகுமாறும், தேன்பட்டவிடம் போலத் தித்திக்கின்ற சிறுபயனை யுறுபயனென் ¶ றருந்து மாறும், தான்பட்டபடி † யிந்நேர் தானே கண்டு தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமேறக்கவாறே. (ரு)

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஶ்ரீபரமபதஸோபாநே த்விதீயம் நிர்வேதபர்வ.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

மாறும் - அசித்கல்பனாய் அனேககாலம் மோஹித்திருக்கும் ப்ரகாரத்தையும், மறித்து - திரும்பி, ஒருகாலெலே யூழிசென்றால் - ஊழி - ப்ரளயம், அநேகப்ரளய ஸத்ருச தீர்க்ககாலங்கழிந்த பின், அன்று-ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே, ஊன்பட்ட-ஊன் - மாம்ஸம், இது உபலக்ஷணம். மாம்ஸாஸ்ருங்மயமான, உடலாழி - தேவாதி சதுர்விததேஹங்களினுடைய புநராவ்ருத்திரூபமான ஜன்மசக்ரமென்றபடி. இந்த ஜன்மசக்ரத்தையாச்ரயித்துவரும், வினை-புண்யபாபரூப கர்மங்களினுடைய, ஒழுக்கு-ப்ரவாஹம், அதில், அகப்பட்டு இதிசேஷ:. ஒருகரையும் காணாதே-மோக்ஷமாகிற முக்யமான பாரத்தைக் காணமாட்டாதே, ஒழுகுமாறும்-ஒழுகிப்போகிற ப்ரகாரத்தையும், அந்த ஸம்ஸாராவஸ்தையில், தேன் பட்டவிடம்போல் - மதுஸம்ஸ்ப்ருஷ்டமான விஷம்போலே, தித்திக்கின்ற - ஆபாதத: ஸ்வாதுவாகத்தோற்றுகிற, சிறுபயனே - சிற்றின்பமான சப்தாதிவிஷயங்களையே, உறுபயன், ஆத்மாவுக்கு யோக்யமான மஹாபலம், என்று அருந்துமாறும்-என்றறிந்து ஆஸ்வாதித்துக்கொண்டிருக்கும் ப்ரகாரத்தையும், தான்பட்டபடி-இப்படித் தான் அநுபவிக்கும் ப்ரகாரங்களை, இந்நேர் - இந்தப்ரகாரத்திலே, தானே-ஸ்வயமேவ, கண்டு - சாஸ்த்ரோபதேசமுகத்தாலே பராமர்சித்து, தளர்ந்திடுமேல்-தளருமாகில், நிர்வேதப்படுமாகில், அவனுக்கிதி சேஷ:. மேல் - இந் நிர்வேதம் பிறந்ததற்குமேல், தக்கவாறே - ஆத்மாவுக்குத் தகுதியான ஹிதப்ரவ்ருத்திகளே, வளர்ந்திடும் - ப்ரதிதினம் அபிவ்ருத்தமாய்ச் செல்லும் என்கை. (ரு)

¶ அழுந்துமாறும் என்றும்,

† இன்றேதானேகண்டு என்றும் பாடமுண்டு.

த்ருதீயம் விரக்திபர்வ ॥

உலகத்துயர்ந்தவரொன்றும் பயனிலுறுந்துயரும்
அலகிற்படாதவப்போகங் கவர்ந்தெழுமம்புயத்தோன்
கலகத்தொழின்மதுகைடபராற்படுங் கட்ட¶மெண்ணும்
பலகற்றமெய்யடியார்படியாரிக்கடும்பவத்தே.

இப்படி விவேகஜந்ய நிர்வேதவிரக்தியாலே உபாய ஸ்வரூபமற்றாலும், “ஸர்வஸ்வேந வ்யாதி” என்னுமளவாக ஸ்வர்கமடியாய் ஐஹிகாமுஷ்மிக ஸர்வஸமாநேஷணத்தாலே ஹேமஹேதப்ரவண்யங்களாகிற பொன்விலங்குகளைப் பூட்டிக்கொள்ளுமாகில் இவன் முமுக்ஷுவல்லனும். ஆகையால் கடையறப் பாசங்கள் விடும்படி இதரஸர்வதோஷங்களை யதாவஸ்திதமாக அநுஸந்திக்கவேண்டும். எல்லாருக்குந்தத் தம்

(உலகத்தித்யாதி) ஆப்ரஹ்மபதம் ஸர்வலோகத்திலும் துக்கத்தைப் பராமர்சிப்பார் இந்தஸம்ஸாரத்தினின்றும் விரக்தராவரென்கிறது. உலகத்து - இந்தப் பூலோகத்தில், உயர்ந்தவர் - ராஜ்யதநவீர்யாதிகளாலுந் நதரான நள ந்ருக நஹுஷாதிகள், ஒன்றும் பயனில் - அனுபவிக்கும் ஸாம்ராஜ்யபதவியில், உறுந் துயரும் - சம்பவிக்கும் துக்கபரம்பரைகளையும், உன்மத்தக்ருகலாஸபுஜங்கமாத்யவஸ்தைகளை யடைந்தார்களிறே யவர்கள். அலகு - அவதி, அலகில்படாத - நிரவதிகம். அப்போகம் - ஆநந்தவல்லியில் ப்ரஸித்தமானபோகம். அதை, கவர்ந்து - தொடர்ந்து, எழுமம்புயத்தோன் - அத்யுன்னதனான ப்ரஹ்மாவும், இப்பால்பட்ட ஸர்வரிலும் மேலான போகத்தையுடைய ப்ரஹ்மாவும், கலகத்தொழில் - கலகமே க்ருத்யமாகவுடைய மதுகைடபராலே, படுங்கட்டம் - அதாவது வேதத்தைப்பறிகொடுத்துச் சுருணை சோர்ந்த கணக்கனைப்போலே ப்ரலபிக்கை முதலான கஷ்டம். எண்ணும் - பராமர்சிக்குமவரான, பலகற்ற - பலவிதமான சாஸ்த்ரார்த்தங்களையும் தெளிந்து பகவத்பரத்வத்தையும் ததிதராவரத்வத்தையும் நித்யவிபூதியின் வைலக்ஷண்யத்தையும் லீலாவிபூதியின் ஹேயத்வத்தையும் அறிந்து நிர்வேதமுடைய, மெய்யடியார் - அடம்பரான பரமைகாந்திகள், இக்கடும்பவத்தே - இந்த க்ரூரமான ஸம்ஸாரத்தில், படியார் - பற்றுள்ளவராகாரென்கை. (௬)

¶ எண்ணில் என்றும் பாடம்.

ஸூவங்களை 'ஒருநாயகம், நண்ணுதார்முறுவலிப்ப, கொண்டபெண்டீர்'' இத்யாதிகளிற்படியே தெளியப்பார்க்குமளவில் இவை நிரஞ்ஜந வ்யாவ்ருத்தஸாஸாரத்தின் நடுவே மின்போலே தோற்றுவதும் மறைவதுமாம்படி தோற்றும். ஜீவாத்மாவுக்கு ஸ்வாநமுமாய் ஜீவாத்மாவகாரணமுமான ஸ்வஸரீரவஸ்தும்நிவர்ணனுக்கு காரணவாதிபலிபியொத்யமாய் க்ஷணத்வஸவயமாய் க்ஷத்ரிய ஜேயமுமாய் தமிழுணுபஜீவிதமாயிருக்குமென்னுமிடம் 'ஸவயாதர்வயம் திரேவம் ஸாஸ்லுஸோணிதஸம்ஹவழ'' என்றாற்போல் சொல்லுகிற ஸ்ருதிகளிலும் 'க்ஷயிஷ்ணும் ஸ்நாயபவல, ரோம ஸாஸ்ருக்ச்வப்ரியவிண்முத்ரூழ, க்ஷிதர்வஸாவம் யோகழ, ஜீவஸாதீநாஸழ, ரோகஷெத்ர க்ஷணஸம்ஹழ, யா ஸேவ ராத்ரிம் வ்யமோழ, சூஸஞ்தாரதாம் யாதி, ஸஸக்ஷாயிநம் ஸ்ரு த்யாழ, ஷாதரேணுத்ருவணீஷாஸ்யாழ, ஊனுடைச் சுவர் வைத்து, பொல்லாவாக்கை,* புண்ணாக்கை, மின்னினிலையிலமன்னுயிராக்கைகள், வேதநூற்பிராயம்நூறு' இத்யாதிகளிலும் விளங்கக் காணலாம்.

ஆகையால், யயாதிராய் வக்ரவர்த்திவஷம் பெற்றிருந்த நஹுஷாதிகளுள்பட உத்தக்ருகஸாஸ ஸாஜஸாநர காஷ்யவஸெலகளையுமடைந்து அவர்கள்பட்டபாடுகளையும், அவர்கள் தாரங்களும் அனுமரணம் பண்ணிப்போனபடிகளையுங்கேட்டால் 'இன்பமருஞ் செல்வமு மிவ்வரசும்யான்வேண்டேன்' என்னும்படி ராஜ்யாதிஸவஸம்ஸநஷம் பியாது.

தன்னேடொக்க வொழுகுசங்கிலியிலே கோப்புண்டு உழலுகிற தேவர்களுக்கிறைக்குடி மகனாய் நெடுநேர்த்திகளோடும் நெடுங்காயக்லேஸங்களோடும் நெடுநாள் பண்ணின யஜ்ஞாதிவ்யாஸத்துக்கு ஸமமாக, ஸ்வரூபஸரீரம் விழுந்தால் ஸம்ஷிமிக ஸவர்காரணமான ஹரிதஸரீக்ஷஸஷாயத்தோடே கூடி வ்ராணவ்வநவெமவிக்ஷிவத்ணுய்க்கொண்டு யதேரா த்ர்யவாரவக்ஷ உக்ஷிணாயநவித்ரயொகாகாஸவஜ்ரத்தாலே ஸுமரப்பரணிலே ஏறி அங்கே தேவஜாதியென்னும்படி ஒரு தேஹத்

தையெடுத்து எருதுபரதேசம்போன கணக்காய் தனக்கு மேலான தேவர்களுக்கு வாஹநமென்னலாம்படி எடுத்துச் சுமந்து திரிந்து ஏறவிட்ட கர்மம் விசையற்ற வளவிலே 'அதுலம் ஸ்தாநம் தேஷாம் । த்ருஷ்ட்வா ஹ்ய நாரோஹா: । சுவர்க்கமெய்தியும்மீள்வர்கள்' இத்யாதிகள்படியே தள்ளுண்டு தகரவிழுந்து அங்கே தேஹஶரீரத்தையும் இழந்து அதின் ஸம்ஸ்க்ருதஸூக்ஷ்மஶரீரத்தோடே கூட ஸ்வஸ்தாநத்தினின்றும் ஆகாஶவாயுதூமாப்ரமேகவ்ருஷ்டிவ்ரீஹ்யாதிகளிலே பிரியப்பேரிடவொண்ணாதபடி கலந்து போந்து புருஷனைக்கொண்டு பாபஶரீரநரகத்திலே ப்ரவேஶித்து ரேதோரூபமாய் யோநித்வாரத்தாலே ஸ்த்ரீஶரீரயோணிதகர்ப்பத்திலேவிழுந்து கர்ப்பவாஸாத்யவஸ்தைகளையுமடைந்து, ஸ்ராவபாதாதிவிபத்துக்களுக்குத் தப்பினாகில் புண்ணமறையவரியுண்டு ஶக்ருந்மூத்ரருதிரவஸாயியாய் வீபிதஸர்வாங்கனாய் முகம்புதையுண்டு, அதிதுஸ்ஸஹங்களான கர்ப்பவாஸ க்லேஶங்களையுமநுபவித்து, உல்பஸம்வேஷ்டிதனாய் ஹாநவ்ருஷ்டிவனைக்கொண்டு ப்ராஜாபத்யவாயுவாலே தலைகீழாகத்திருப்புண்டு ப்ரஸூதிமாருதவேகத்தாலே யோநியந்த்ரபீடிதனாய்க்கொண்டு மஹாதுஃகத்தோடே கீடாங்கங்கள் போலே பூமிப்ரஸவத்திலேவிழுந்து, பாஹ்யவாயுஸம்ஸ்பர்ஶத்திலே மோஹிநியான வைஷ்ணவமாயையாலே ஸர்வஜ்ஞத்வஜ்ஞானை, ஜந்மாந்தரஸம்ஸ்காரஸ்ம்ருதிகளையிழந்து இவர் திசைதிசைவலித்தேத்தபாஹ்யாதிவாயுக்காஞ்சநிர்வாதா: வபரவஶராலே தவனைப் 'வனகொத்ரஸதம் ஸ்ருத்யாயே வர்ணஃ ப்ரவக்ஷ்யதே' என்கிறபடியே ஏதேனுமொருவயஸ்ஸிலே மரணவேதனையோடே தலைக்கட்டி பழையவட்டத்திலே சூறுவளிக்காற்றுபோலே சுழலும்படிகளைக்கேட்டால், ஸம்ஸாராதிஸர்வஸங்கநிவ்ருத்தியுண்டாம்.

ராவணஹிரண்யவ்ருத்ராதிகள்கையிலே படும்பாட்டைக் கேட்டால், சந்தனங்கழிவோடொத்த போகவாஸநாதிவஸ்துக்களிலும் ஸங்கம் தீரும்.

அவர்களைப்பிடித்த ராவணாதிகள் தாங்களும் காகதூலீயப்ரா
திகள் கையிலே கட்டுண்டும் நெருக்குண்டும் முடிவில் புத்ரபௌ
த்ராதிகளையும் இழந்து கழுகுநிழலிலே கபந்தங்கள் கதறக்கிட
ந்தபடிகளைக்கேட்டால், திண்கழற்காலசுரர்கள் செல்வங்களிலும்
சிந்தை செல்லாது.

இவர்களுக்கு வரங்கொடுத்து வாழ்விக்கவல்லனாய் ஸர்வ
மேதயஜ்ஞத்தாலே தேவதேவனென்று பேர்பெற்றுத் திரிபுரமெ
ரிக்குஞ்சேவகமுடையனான வ்ருஷ்டிஸம்ஹாராதிகாரிக்கு ப்ரஹ்மகபா
லாதிவ்ருத்தாந்தங்களில் பிறந்த விசேஷங்களைக்கேட்டால், ரு
த்ரபதத்திலும் ருசிபிறவாது.

சில ஸ்ருஷ்டிவிசேஷங்களிலே ருத்ரனுக்கு ஜ்யேஷ்டப்ரா
தாவாயும் பிதாவாயும் பிறந்து ஸர்வேச்வரனுக்கு ஔரஸ
புத்ரனுமாய் ஸர்வஹிதசிஷ்யனுமாய்க்கொண்டு க்ஷேத்ரஜ்ஞ
ருடைய ஸ்தாநங்களெல்லாவற்றிலும் மேலானஸ்தாநத்தையுடை
யனான ப்ரஹ்மா தான் பெருவிசும்பின்மீது போயிருக்கும் நெடு
வெள்ளமெல்லாம் கணைக்காலளவாம்படி வளர்ந்துவந்த மதுகைட
பர்களைக்கண்டு மோஹாயாசத்ராஸனாய்த்தனக்குக் கண்களும் ஸ்தநங்
களுமான வேதங்களைப்பறிகொடுத்துச்சுருணைசோர்ந்த கணக்கனைப்
போலே நீர்க்கடை நிலக்கடையறியாதே விலாபம்பண்ண, அப்
போது கேட்டருளினொரு பரமகாருணிகனானவன் விரோதி
நிராகரணம்பண்ணி வேதங்களையும் மீட்டுக்கொடுக்க, மீண்டும்
ஜ்ஞாநிவசியென்று வீற்றிருந்தபடியையுமநுஸந்தித்து 'ப்ர
ஹ்மஸ்தவ மேதயஜ்ஞா:, கல்பாநாம் பரிவர்த்தநாவிபிந்நா
தபோஜ்ஜிதம், சக்ரா ரமணீயதாம் லோகே நச்யந்தீதா: விதா
மோஹா:, நினைப்பான்புகிற் கடலெக்கலி நுண்மணலிற் பலர்' இத்யாதி
களையும் நிரூபித்தால், 'பதந்தி ப்ரஜாநாமைச்வர்யம்'
இத்யாதிகளில்படியே ஹிரண்யகர்ப்பபதத்தையும் த்ருணீகரித்
துக்கூட்டரிய துயரறுசுடரடியே கூடலாமாகில் ஒரு கதம்பாதி
ஸ்தாவரஜந்மத்தையே ப்ரார்த்திக்கும்படியாம்.

இப்படி வரசேவதஸ்ஸாவத்தைக் கேட்டவர்களுக்கு 'ஸ தேவோ நிரயாஸ்த, தஸ்யாஜ்ஞாயோ ஹேதுய'என்கிற படியே இமையோர்வாழ்தனிமுட்டைக் கோட்டைக்குட்பட்ட குறிச்சிகளெல்லாம் மூவேழுநரகங்களோடொக்க, இவையும் ஈரேழு நரகமென்னலாம்படியாயிருக்கும். 'யம் லப்த்வா சாபரம் லாபம் மந்யதே நாதிகம் தத:'என்னும்படி நிரதிசயமான தெரிவரிய வளவில்லா ஸுகாநுபவமும் வ்ருத்திவிசேஷத்தாலே வரதாநுபவத்தோடே கூடாதே சிற்றின்பமாயிருக விறப்பென்னும் ஞானிக்குமப்பயனில்லையேயென்னும்படி 'ஸர்வம் வ்யஸநமாண:' என்று சொல்லும்படி கழிப்பானுகையாலே ஒழிந்தேனென்று உபேக்ஷாவிஷயமாம். ஹோமத்ரநித்யமும்போலே ஹோமநித்யமும் ஹோமநித்யதைக்கு வ்யவஸாயகமன்று. மன்னுறிலென்னும் வ்யதிரேகோக்தியாலுமிவ்வர்த்தம் ஸித்தம்.

இப்படி ப்ரயோஜநாந்தரவிரக்தி பிறந்தால், உன்னாலல்லால் யாவராலுமொன்றுங் குறைவேண்டேனென்னும், உன்னித்து மற்றோர்தெய்வம் தொழா ளவனையல்லாலென்னும்படி வரிதீதஸ்ய ரூபமான மற்றொருதெய்வந் தொழாதே, மற்றுமோர்தெய்வமுளதென்றிருக்கும் ஸம்ஸாரிஜநத்தோடும் நெருங்காதே "யூயம் யூயம் வயம் வயம்" என்று வேறுபட்டு, கொள்ளக்குறைவில்லாதவள்ளல் மணிவண்ணன் பக்கலிலும் கூறைசோறென்றுற்போலே தனக்கு மற்றொரு ப்ரயோஜநாந்தரத்தை அபேக்ஷியாதே, ஸ்வாபாவமான ஸ்வரூபத்தில் உசிதவர்ணாச்ரமத்திலே ஊற்றமுடையனும்.

தந்திரங்களளவிலராய்த் தனத்தான்மிக்க தார்வேந்தர்தொழவையமாண்டார்மாண்டார், சந்திரனுஞ்சூரியனும்வீயுங்காலந்

(தந்திரங்ளித்யாதி) லீலாவிபூதியின் அநித்யதையை யறியுமவர் லீலாவிபூதியை நரகமாக வெண்ணிப் பரமபதத்தை யாகாங்க்ஷிப்பரென்கிறது. தந்திரங்கள் - தந்த்ரசப்தவாச்யமான ரதகஜதுரகபதாதிரூபபரிச்சதங்கள், அளவிலராய் - அபரிமிதங்களாயுடையவராய், தனத்

தாரகையின்வடமற்றுத் தனிவானுகும், இந்திரனுமேறுயர்த்த வீசன்றானு மீரிரண்டுமுகத்தானு மில்லாவந்நாள், நந்திருமானி லகண்டார் நாகமெல்லா நரகென்றுநற்பதமே நாடுவாறே. (எ)

ஐதி கவிதாகிகவிஹஸ்ய ஸவதஜஸ்ஸதஜஸ்ய
ஸ்ரீவெகேடநாயஸ்ய வெதாஹாவாயஸ்ய கூதிஷு
ஸ்ரீவரவேடிவொவாமெ த்ரூதீயம் விவகிவவ ।
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

வதுாயம் ஹீதிவவ ॥

துறவறமேதுணிவார்துணுக்கற்றவிளந்திணிவோர்
உறவிலாதவிணுமுயர்ந்தாருடனென்றிநின்றேம்

தால் மிக்க - தனதான்யாதிஸம்பத்தாலே யதிசயித்த, தார் - சிரோமாலா வக்ஷோமாலா விசிஷ்டரான, வேந்தர் - ராஜாக்கள், ஸூர்ய சந்த்ரவம்சோத்பவ ராஜாக்கள், தொழ - தங்கள் கிரீடமிவன்பாதத்தில் கடிதமாம்படி ஸாஷ்டாங்கப்ரணமம்பண்ணிஸேவியாநிற்க, வையமாண்டார் - இராஜ்ய மாண்டவர்களெல்லாரும், மாண்டார் - அநாமசேஷமாக நஷ்டமானுர்கள்; பின்னும், சந்திரனும் சூரியனும் வீயும் காலம் - ஸூர்ய சந்த்ரர்களும் நசிக்குங்காலத்து, தாரகையின்வடம் - நக்ஷத்ர பங்க்திகள், அற்று - நசித்து, தனிவானுகும் - பரமாகாசமேயவசிஷ்டமாகும்; தனிவானென்று - ஸூக்ஷ்மப்ரக்ருதியை விவக்ஷித்து அதுவே சேஷிக்குமென்னவுமாம். இந்திரனும், ஏறுயர்த்தவீசன்தானும் - ஏறு - வ்ருஷபம், அதை த்வஜமாகவெடுத்த ஈசனும், தானுமென்கையாலே யவனுடைய வ்யாவ்ருத்தி தோற்றுகிறது. ஈரிரண்டு முகத்தானும் - சதுர்முகனுன ப்ரும்மாவும், இல்லா அந்நாள் - மஹோபநிஷத்தில் சொன்னபடியே இவர்களொருவருமில்லாத ப்ரும்மப்ராளயத்தில், நந்திருமால் நிலகண்டார்-அஸ்மத்ஸ்வாமியான ஶ்ரிய:பதி தன்னுடைய ஸர்வகாரணத்வந் தோற்றநிற்கும் நிலையை சாஸ்த்ரத்தாலறிந்தவர்கள், நாகமெல்லாம் நரகென்று - ஸ்வர்க்கம்முதலான லீலாவிபூதியெல்லாவற்றையும் நரகதுல்யங்களென்று தெளிந்து, வைராக்யத்தையடைந்து, நற்பதமே நாடுவாரே - ஸர்வவிலக்ஷணமான பரமபதத்தையே தேடும் சிலராவர்களென்கை. (எ)

(துறவறமித்யாதி)ஸம்ஸாரிகள் நமக்குற வாகாமையால் முமுக்ஷுக்களோடு சேர்ந்துநின்றவராய் விவேகநிர்வேத விரக்தி பீதிகளையுண்டா

மறவழிமாற்றியெம்மையலைத்தீர்த்தவர் மன்னருளால்
கறவையுகந்தபிரான் கழல்சூடுங்கருத்தினமே. (௮)

இப்படி விவேகவிசேஷத்தாலே ஸ்தூலாபசாராதிநிவ்ருத்தியும், நிர்வேதவிசேஷத்தாலே நிஷித்தநிவ்ருத்தியும், விரக்திவிசேஷத்தாலே பஹுக்ஷுத்ரகாம்யநிவ்ருத்தியும் பிறந்தாலும், ப்ராரப்தமுமாய் போகத்தாலுமன்றிக்கே க்ருதப்ராயச்சித்தமுமன்றிக்கே அப்ராப்தகாலமுமாய் அநாரப்தகாலமுமாய்க்கிடக்கிற அபூர்வபாபத்தைப் பார்த்தால், போகத்தாலேயாதல் ப்ராயச்சித்தத்தாலேயாதல் நிச்சேஷமாகக் கழிக்கவரிதாயிருக்கிறபடியையும், இவற்றின் பலமான அநந்தபாபராசிகளை அபிவ்ருத்தித்து அபாரமான துஃகஸாகரத்திலே அழுந்தவேண்டும்படிவரும் ஜந்மஜராமரணாதிசக்ராவர்த்திப்ரவாஹத்தையும், உபாயவேறித் தாஸ்யஸ்ரீயராய்த் தோற்றினாரை பலத்தாலே ஸ்வபாவஸவென்று தகரவிழவிடுவார் ஸ்வவிஷயவ்ருத்திகளையும் ரக்ஷ்யரக்ஷணத்துக்கு மதாமதம் பண்ணிவைப்பார் ஸ்வதந்த்ரமாநுஜை அவிநீதராக்கிக்கொண்டாள்வரான தைவதாந்தரங்களினு

க்கின வாசார்யக்ருபையாலே மோக்ஷப்ரயோஜநராகப் பெற்றோ மென்கிறது. துறவறமே துணிவார் - த்யாஜ்யதர்ம்மங்களான வாத்மாபஹாரங்களில் வ்யவஸாயத்தையுடையார், தேஹாத்மாபிமாநிகளென்றபடி. துணுக்கு - மோக்ஷப்ராவண்யம், அற்ற - அதில்லாத, இளந்துணிவு-ஐச்வர்யகைவல்யங்களில் துணிவு, இதரபுருஷார்த்தருசி, அதனையுடைய ப்ரயோஜநாந்தரபரரும், உறவிலர் - முமுக்ஷுவுக்கு பந்துக்களல்லர், ஆதலின், நாம் - மோக்ஷப்ரயோஜநரான நாம், உயர்ந்தாருடன் - மோக்ஷப்ரயோஜநத்வேந உந்நதரான முமுக்ஷுக்களோடே ஒன்றிநின்றோம்-ஏககண்டராய்க்கலந்து வர்த்திக்கப்பெற்றோம்; கிஞ்ச, மறவழி மாற்றி-மறம்-கோபம், இது காமாதிகளையும் உபலக்ஷிக்கிறது. காமக்ரோதாதிமார்க்கங்களைக்கழிப்பித்து, அதாவது விவேகநிர்வேதவிரக்திபீதிகளை யுண்டாக்கியென்றபடி எம்மையலைத் தீர்த்தவர் - ஸம்ஸாரப்ராந்தியைக் கழிப்பித்த வாசார்யர்கள், அவருடைய, மன் அருளால் - ஸ்திரமான க்ருபையாலே, கறவையுகந்தபிரான்-கோகணத்தை யுகந்து ரக்ஷித்த உபகாரகனான க்ருஷ்ணனுடைய, கழல்சூடும் கருத்தினமே - திருவடிகளை யாஸ்ரயிக்கும் அபிப்ராயத்தை யுடையோமானோமென்கை. (௮)

டைய ப்ராப்தியில் தோஷங்களையும், நமன்றமர்பாசம்விட்டாலலைப் பூணுண்ணுமவ்வல்லல்களையும், வெஞ்சொலாளரான நமன்றமர்செய்யும் வேதனைகளையும், பீஷண யமபடவாக்யந் கேட்டு மோஹித்துவிழும்படியான நரகமார்க்கத்தின் படிகளையும், அதிகோர ஸஹஸ்ரநரகயாதநைகளையும், தாபத்ரயாத்யாயாதிகளிலே பரக்கக் கேட்டு, அஹம் பீதோऽஸ்மி, தெளிதொறும்நன்று மஞ்சுவன்நரகம்நானடைதலென்னும் அதிதீவ்ரபீதியாலே, காற்றினிடைப்பட்ட கலவர்மனம்போலேயும் ஆற்றங்கரைவாழ்மரம்போலவும், இருபாடெரிகொள்ளியினுள்ளெறும்புபோலவும், பாம்போடொருகூரையிலேபயின்றாற்போலவும், வெள்ளத்திடைப்பட்டநரியினம்போலவுமுள்ளந்துளங்கி ப்ரயோஜநாந்தரபரனாதல் தத்ப்ரயாநனாதல் உபயஸம்பந்தியாதல் மோக்ஷப்ரயாநனாதலன்றிக்கே மோக்ஷைகபரனாய், ஸர்வேச்வரப்ராப்திக்ரமமாய் இட்டபடைகற்படையாய் விஷவிஷஸம்ஸர்கரஹிதமான நிவ்ருத்திமார்க்கத்திலே 'ஜராநாஷ்ட்ரம் ப்ராப்ய, ஜைதா வார்ண்யவார்ண்யந, கிளரொளியிளமை கெடுவதன்முன்னம்' இத்யாதிகள்படியே விலக்கற்ற விரைதலுடையனும். (விலக்கத்தவிர்த்தலுடையனும்)

வந்தனபோல் வருவனவுமனந்தமாகி மாளாத துயர் தருவல்வினைநெருப்புக், கிந்தனமாயெண்ணிறந்தகாலமெல்லாமின்னமுமிப்பவக்குழிக்கே * யழியாவண்ணம், வெந்த

(வந்தனவித்யாதி) அநாதிகாலம் ஸம்ஸாரத்தில் தாம் பட்டபாட்டைக்கண்டு பயமுடையார் ஸர்வேச்வரனாலே விதிக்கப்பட்ட பக்திப்ரபத்திகளாகிற மோக்ஷோபாயத்திலிழிவார்களென்கிறது. வந்தனபோல் கீழுக்குவந்த துக்கங்கள்போலே, வருவனவும் - இனிமேல் வரப்புகுகிற துக்கங்களும், அநந்தமாகி - முடிவில்லாதனவாகி, மாளாத - அனுபவ ப்ராயச்சித்தாதிகளால் கழிக்கவரிதான, துயர்தரு வல்வினை - துயரத்தைக்கொடுக்குங் கொடியகர்மம் என்றபடி, அதாகிற, நெருப்புக்கு - தாவாக்நிக்கு, இந்தனமாய் - எரிகருவியாய், எண்ணிறந்த காலமெல்லாம் - அஸங்க்யாதமான பூர்வகாலமெல்லாம், இந்தனமாயென்று பூர்வேணாந்வய:. இன்னமும் - இனிமேலும், எண்ணிறந்த காலமெல்லாம்,

* இழி என்றும் பாடம்.

தொருகுழவியைநற்குமாரனுக்கும்வெறித்துளவவித்தகனார்
விதியேகொண்டார், பந்தனமாமவையனைத்தும் பாறு
கைக்கும் பழமறையின்பதமொன்றே பயிலுவாரே. (௯)

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீபரமபதஸோபாநே சதுர்த்தம் பீதிபர்வ ।

சிரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

பஞ்சமம் ப்ரஸாதநபர்வ ॥

கருமாலையில்வருங் கட்டங்கழிக்குங் கருத்துடையா
ரொருமால்பெருகிய யோகின்முயன்று மதன்றியுநம்

இப்பவக்குழிக்கே-இஸ்ஸம்ஸாரகர்த்தத்திலே, அழியாவண்ணம்- அஸத்கல்பனாய்ப் போகாதபடியை, எண்ணியிதிசேஷ:. வெந்ததொருகுழவியை - அச்வத்தாமாஸ்த்ரத்தால் கர்பத்திலே கரியாய்வெந்ததொருகுமாரனை, பரிக்ஷித்தையென்றபடி. நல்குமாரனுக்கும் - நல்லகுமாரனுக்கின, ஆக்குமென்றது தாச்சீல்யப்ரத்யயாந்தம். வெறித்துளவவித்தகனார் - பரிமளயுக்தமாயிருக்கிற துழாய்மாலையுடைய விஸ்மயநீயனான க்ருஷ்ணனுடைய, விதியேகொண்டார் - "பஜஸ்வ, ஶரணம் வ்ரஜ" என்கிற விதிவாக்யங்களைத் தங்களுக்குத் தஞ்சமாகப்பரிக்ரகித்தவர்கள், பந்தனமாமவையனைத்தும் - மோக்ஷப்ரதிபந்தகங்களாகிற ஸர்வபாபங்களையும், பாறுகைக்கும் - தூளியாம்படி ஸம்ஹரிக்கும், பாறு - தூளி, கைக்கும்- ஸம்ஹரிக்கும், பழமறையின் பதமொன்றே - அநாதியான வேதாந்தங்களில் விதிக்கப்பட்ட பதமொன்றே, ப்ரபத்திமார்க்கமான முக்யமார்க்கமொன்றையே, பயிலுவார் - அப்யஸிக்கப்பார்ப்பர். ஸ்வாதிகாராநுரூபமாக வொருவுபாயத்தைப் பற்றப்பார்ப்பர்களென்கை. (௧)

(கருமாலையித்யாதி)ஸம்ஸாரதுக்கத்தைக் கழிக்கப்பார்ப்பார் பக்திப்ரபத்திகளில் ஸ்வாதிகாராநுரூபமாகவொன்றைப்பற்றி யபிமதபலம்ப்ராபிக்கும்வகை பார்த்திருப்பார்களென்கிறது. கருமாலையில்-கர்ப்பபரம்பரையில், வருங்கட்டம்-வருகிறகஷ்டம்,சக்ருந்மூத்ரமஹாபங்க சாயித்வாதிகள் கர்ப்பஜந்மஜராமரணாதிதுக்கங்களை யென்றபடி. கழிக்குங்கருத்துடையார்-கழித்துக்கொள்ளவேண்டுமென்னும் அபிப்ராயத்தையுடைய

திருமாலடியிணை திண்சரணுகு மெனவரித்துந்
தருமாலினியவைதானே யெனத்தக வெண்ணுவரே. (க0)

இப்படி வஸிவபிண-ுவிவெகநிரெவ-ுஉவிரக்திகள் பிறந்தவனுடைய வர்ணாவாவரபிவவ்யாயிவிஶெஷங்களுக்கெல்லாம், எருத்துக்கொடியுடையானும் பிரமனு மிந்திரனும் மற்றுமொருவரும்இப்பிறவியென்னும்நோய்க்குமருந்தறியாதிருக்க, மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணன், ‘‘ஹஜஸ்வ ாமு’’ என்றும், ‘‘ாமெகம் ஶரணம் வ்ரஜ’’ என்றும் விஹித்த ஹெஷஜங்களிரண்டில், ஹக்தியொமம்கஉ-ுயொமாஜிகளை முன்னிட்டுக்கொண்டுமேலும் வண-ுாப்ரரஷியஉ-ுங்களை யவெக்ஷித்து ஞாரஂஹத்திலுஉஜாராயாவஸரங்களிலும்வ்ருவதியைக்கைதொடுமானமாகக்கொண்டு வ்ருவரத்தமாய், கஉ்ருதயாரெரபோலே கவிஹிஜஸ்ருதிஸஜாநரபிவமாய், ஸ்வநயீஉஶ-ுநாஜிஶஉவங்களாலே சொல்லும்படியான வெளிச்செறிப்பையுடைத்தாய், ஞஸநாஜிவஸிகாரயகஜமாய்க்கொண்டு வனகாமருதாநமணஉெஶகாரஙங்களிலே கநஜிநஉநவதி-ுக்க வளர்ந்துவருவதாய், கஷிஉவ்ருத்ரயாஜமாயிருக்கும். இது ‘நாநாஶஉவாஜிஹெஉாக’ என்கிறபடியே கநெக வியமாயிருக்கும். இவற்றில் கநந்ருவ்ருயொஜநனுக்கு ஷயமெவ

முமுக்ஷுக்கள், ஒருமால் பெருகிய - ஏகரூபத்வேந அவிச்சின்னமான பக்திரூபாபந்ந ஜ்ஞாநமானது ஸந்ததிரூபேண ப்ரவஹிக்கிற, யோகில் முயன்று - பக்தியோகத்திலுத்போகித்து, ப்ரவேசித்தென்றபடி. அதன்றியும் - அந்தப்பக்தியோகத்தை யொழியவும், அகிஞ்சனருமாய்விளம்பாக்ஷமருமாயிருக்கும் அதிகாரிகள், நந்திருமால் - ப்ரஸித்தனான ஸ்ரீய:பதியினுடைய, நாமென்று ப்ரஸித்தியையுங்காட்டும். அடியிணையே - இரண்டு திருவடிகளே, திண்சரணுகுமென - அமோகோபாயமாகவேனுமென்று, வரித்தும் - ஸாங்காத்மரக்ஷாபரஸமர்ப்பணம் பண்ணியும், இனி - பரஸமர்ப்பணாநந்தரம், அவை - அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திகளை, தானே தருமென - நம்மையும் ஸஹகார்யந்தரமபேக்ஷியாமல் ஸ்வயமேவ ப்ரஸாதித்தருளுமென்று விஸ்வஸித்து, தகவு - அவனுடைய க்ருபையை, எண்ணுவர் - சாதகபக்ஷி மேகத்தைப் பார்த்திருக்குமாப்போலே க்ருபையைப் பார்த்திருப்பார்களென்கை. (க0)

ஷ்டமில்லாமையாலே யதாதிகாரம். 'நான்யம் தேவம் நமஸ்குர்யா நான்யம் தேவம் நிரீக்ஷயேத்' என்கிறபடியே அவனையல்லால் மற்றொரு தெய்வந்தொழாதே 'ப்ரணமந்தி தேவா:' என்னும்படி யேயவர்கள் தொழாநிற்குமிவன் அநந்யார்ஹன். ப்ரயோஜநாந்தரபரனுடைய ஸம்பந்தம் ப்ராந்தமாநாபமாநார்ஹம். அநந்யப்ரயோஜநனுடைய ஸம்பந்தம் வந்த்யமாநாபமாநார்ஹம். ஆத்மகுணங்களில்லாதவனுக்கு ஸம்ஸ்காரங்களெல்லாமுண்டானாலும் முக்தியில்லையென்றும், ஆத்மகுணவிசிஷ்டனுடையவன் ஸம்ஸ்காரங்களில் பெற்றதுகொண்டு முக்தனுமென்றும் மஹர்ஷிகள் சொன்ன குணங்களில் 'தேவாநந்யயோ கேந ஸக்த்யாதிவிமுக்தி'என்கிற வரவேண்டியதான தங்குணவிசேஷம் ஸ்ரேஷ்டதமம்.

இப்படி ஸர்வாதிகாரமான ஸக்தியோகத்தில் அதிகாரிக்கைக் கீடான விஶ்வக்ஷேமஜ்ஞாநஸத்யாதிகளின்றிக்கே 'நின்னருளே புரிந்திருந்தேன், துணியேனினிநின்னருளல்ல தெனக்கு, உன்றிருவருளாலன்றிக் காப்பரிதால்' என்றிருக்கு மதிகாரிக்கு அநந்யமான ஶரணவரணம் ஆநுகூல்யஸங்கல்பாதிவரிகரமாய், 'அநந்யஸாத்ய ஸ்வாபீஷ்டே'இத்யாதிகள்படியே ப்ராயஶ்சித்தஸகஹஸ்ரந்யாஸமாயிருக்கும். அத்யந்தாசிஞ்சநனுடைய ஸந்யாஸத்திற்கு மவ்விஷயத்தில் அதிவ்யவஸ்திமில்லை. ஸர்வஶக்தியினுடைய ஸங்கல்பத்துக்கவாந்தரவ்யாபாராபேக்ஷாநியமமில்லை, இரண்டுமிப்படி ஸகலத்தாயிருக்கும். ஆசார்யனாலே தன்னை ந்யஸ்தமாகவறிந்த ஶிஷ்யன்தான் ஸந்யாஸம்பண்ணான். இவனுக்கு ஸமயத்தில் ஶங்காதிகள் வந்தாலும், ஆசார்யனுடைய ஸந்யாஸம் ஸமாதிநாஸமதம். அவன் தனக்காகப் பண்ணின ஸந்யாஸம் தனக்கு ப்ரமிதமல்லாதபோது தானும் ஸந்யாஸம் பண்ணினால் வந்யஸந்யாஸம் ஸமித்தேவிடும். பின்பிலிது மிகுதியான ஸூக்தத்தின் படியாம். உயர்ந்த திடர்க்கடைத் தேற்றலாம்படி. தாழ்ச்சியுடைய விஷயத்திலதானே ப்ரவஹிக்கும்படியான க்ருபாகுணத்தாலே

ஸ்வதந்த்ரஶேஷி தன்கூறாகவும் தன்பேறாகவும் மேலுள்ள நன்மைகளையெல்லாம் விளைக்கும். இந்த ப்ரபத்தி 'தாவதா க்ருதீ:' இத்யாதிகள்படியே உபாயமாயும் ஸ்வதந்த்ரமாயும் நின்று ஸகலபலஸாதநமாகையாலும், ஸ்வரக்ஷித்வஸித்திக்குக் கைமுதலற்று ஶரண்யஸ்வபாவாதிபரிஜ்ஞாநமுடையாரெல்லாருக்கும் அதிகரிக்கலாமாகையாலும், தன் பலம்போலே தேஶகாலாதிநியமமில்லாமையாலும் ஸபரிகரமாக ஸக்ருத்கர்த்தவ்யமாகையாலும், ஸுகரமாகையாலும், 'உபாய: ஸுகரஸ்த்வயம் துஷ்கரஶ்ச மதோ மம' என்னும்படியான வ்யவஸாயகௌரவத்தை யுடைத்தாகையாலும், பஹுஶாஸ்த்ரதாத்பர்யத்தையாலும், யஜ்ஞாதிஸாத்யங்களைப்போலே நாஶப்ரத்திபாதகமல்லாமையாலும், ஸர்வோபநிஷத்துக்களுக்கெல்லாம் ஶிரோபூஷணமென்னும்படி மேலாய் நிற்கையாலும், இதின் ப்ரபாவம் 'ஸக்ருதேவ நிரதா:' இத்யாதிகளாலே பரக்கப்பேசப்பட்டது.

மற்றுள்ள ஶாஸ்த்ரார்த்தங்கள்போலே அதிகாரிக்ருத்யமான ப்ரபதநத்தில் சிலருடைய அதிகாரிவிஶேஷணாதிவ்யபதேஶம் விஶேஷாயப்ராயாந்யபரம். ஶ்ருதியில் ந்யாஸப்ரஹ்மஶப்தஸாமாநாதிகரண்யம் அந்யபரம். ஸாங்கப்ரபதநந்யாஸமுமெஶேஷஸம்பந்தனுக்கு ஸாங்கஸித்தமில்லாதவிஷயத்தில் பக்தியும் ப்ரபத்தியும் வைகல்யமும் ஸ்வதந்த்ரமென்னலாயிருக்க பக்தியோகத்தை விஶேஷித்து ஸ்வதந்த்ரமென்றவர்களுக்கு அதிகாரிவிஶேஷஸ்வதந்த்ரவிஷயத்திலே தாத்பர்யம். தேஶகாலாதிகாரத்யாதிபேதத்தாலே ஶாஸ்த்ரவைஷம்யவிகல்பப்ராயஶ்சித்தாதிகளெல்லாவற்றிலும் ப்ரஸித்தம்.

இப்படி யதாதிகாரம் ஸம்யக்ப்ராயஶ்சித்தமாக விஹித்த பக்திப்ரபத்திகளி லொருவழியிலே யிழிந்தவனுக்கு அப்போதே உத்தரபூர்வாகஶ்லேஷ விநாஶங்களுண்டாம். உத்தராகாஶ்லேஷம் ப்ராமாதிகவிஷயம். விவேகாதிபக்தியுடையாருக்கு பாபவிவேகோத்தரவம் அநாவத்தில் புகாது. மந்தவிவேகருக்கு மின்னொளிபோலே தோற்றி ப்ராயஶ்சித்தஹதமாய்மறையும்.

ராமாதிகாரிந்ருமுடையாருக்கு ஶிக்ஷாவிஶேஷங்களாலே பிரித்த
லுண்டு. ஸர்வபாபவிநாஶம் ப்ராரப்தவ்யதிரிக்தவிஷயம்.
ஸுக்ருதப்ரபத்திநிஷ்டனை செய்தவேள்வியனானவனுக்கு ப்ரா
ரப்தகார்யமான கர்மபலத்திலு மார்த்தியினளவுக்கீடாக தே
ஹாந்தராதிஹேதுவான அம்ஶம் கழியும். 'யஸ்ய ப்ரஸாதே
ஸகலாஃ, ப்ரஸந்நேவ த்ருஷ்டேஷு' இத்யாதிகளின்படியே இவனை
ளவில் ஸகலஸ்துரானவர்களெல்லாரும் ஸுப்ரஸந்நராவார்கள். ஆ
மவசவசிக்ருஹீதனுக்கு யமவஶ்யதாதிகளில்லையென்னு மிடம்
'பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந், ப்ரபவோஹம் ந்யந்ருணாம் வி
ஷ்ணோ:, நலியுநரகமும் நைந்து நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை,
நமன்கூறுசெய்துகொண்டிருந்த, குற்றமெண்ண வல்லனே, நாவ
லிட்டுழிதருகின்றோம் நமன்றமர் தலைகண்மீதே, நரகமே சுவர்க்க
மாகு நாமங்களுடையநம்பி' இத்யாதிகளாலே யறியலாம். ஆகை
யாலிப்படி நிஸ்ஸம்ஶயனானவிவன் 'ஆள்கின்றானாழியான் யாரால்
குறையுடையும், எத்தனைவிடர்க்கடற்கிடத்தி யேழை நெஞ்சமே,
திருமாறலைக்கொண்ட நங்களுக்கெங்கேவருந் தீவினையே' இத்யாதி
களின்படியே நிரபேக்ஷனாய் நிர்பரனாய் நிர்பயனும். அங்கு
மவஶ்யமில்லாதபோது மடலூருமவஶ்யமாய் மாகவைகுந்தங்
காண்பதற்கென்மன மேகமெண்ணியிருக்கும்.

முன்செய்தவினைத்திரளின் முளைத்ததன்றி மற்றுள்ள முத
லரிந்து முளைத்தகூற்றில், தன்செய்ய திருவருளா லிசைவுபார்த்

(முன்செய்தவினை யித்யாதி) இப்பாட்டில் ஸர்வபாபவிமோசநத்தைச்சொல்லுகிறது. முன்செய்தவினைத்திரளில்-பூர்வாகஸமூஹத்திலே முளைத்ததன்றி-பலோந்முகமான ப்ராரப்தகர்ம்மமொழிந்த, மற்றுள்ள-ப்ராப்தேதர பூர்வபாப மெல்லாவற்றையும், முதலரிந்து - உபாயப்ராரம்பக்ஷணத்திலுபயாதிகாரிகளுக்கும் பொறுத்து, (இனிமேல் ஸ்வதந்த்ரப்ரபன்னனுக்குச் சொல்லுகிறது) முளைத்த கூற்றில்-ப்ராரப்தாம்சத்திலும் சிறிதம்சங்களை, இசைவுபார்த்து - ப்ரபன்னனுடைய ஆர்த்திதாரதம்யத்தைப்பார்த்து, அதுக்கீடாக, தன்செய்யதிருவருளால்-செய்ய-ருஜுவான, தன்னுடைய ஸ்ரீமத் க்ருபையாலே, தழல்சேர்ந்த தூலமென - அக்னியைச்சேர்ந்த பஞ்சுமலைகள்போலே, தானேதீர்த்து -

துத் தழல்சேர்ந்த தூலமெனத்தானே தீர்த்துப், பின்செய்யும் வினையினினை வொன்றுதொன்றும் பிழைபொறுத்து வேறுளது விரகான்மாற்றுப், என்செய்ய தாமரைக்கட் பெருமானெண்ண மெண்ணுதாரெட்டிரண்டுமெண்ணுதாரே ❋❋ (௧௧)

இதி கவிதார்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு ஸ்ரீபரமபதஸோபாநே பஞ்சமம் ப்ரஸாதநபர்வ.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஷஷ்டம் உத்க்ராந்திபர்வ ||

உறையிட்டவாளென வூனுளுறைகின்றயோகிகளை
நறுமட்டொழிவற்ற நற்றுள வேந்தியநாயகனர்
நிறைமட்டிலாத நெடும்பயன்காட்டநினைத்துடலச்
சிறைவெட்டிவிட்டுவழிப்படுத்தும் வகைசெப்புவமே ❋❋

தக்தமாக்கி, பின்செய்யும்வினையில்-உத்தராகத்தில், நினைவொன்றுது-ஜ்ஞானத்தோடொன்றுதே, ஒன்றும்பிழை - அஜ்ஞானத்தால் வரும் பாபங்களை, பொறுத்து - உபாயபரிக்ரஹவேளையிலே அஶ்லேஷவிஷயமாம்படி ஸங்கல்பித்து, வேறுளது - உத்தராகத்தில் ஜ்ஞானக்ருதாம்ஶத்தை, விரகால்மாற்றும் - விரகு - சாதுர்யம். அதாவது - அநுதாபபுந:ப்ரபத்யுபக்லேஶாதிலக்ஷூபாயத்தாலே, மாற்றுகை-தீர்க்கை, க்ரோடீகரிக்கையென்றபடி. க்ரோடீகரிக்குமவனை, என்செய்யதாமரைக்கட் பெருமான் - மதீயனாய் சிவந்த தாமரைப்பூப்போன்ற திருக்கண்களுடைய வெம்பெருமானுடைய, எண்ணம் - இத்தலையிலுஜ்ஜீவனவிஷய சிந்தாப்ரகாரங்களை, எண்ணுதார்-பராமர்சியாதார், எட்டிரண்டுமெண்ணுதாரே - எட்டுமிரண்டுமறியாத பசுப்ராணியோடொப்பவர். யத்வா-திருவஷ்டாக்ஷரத்தையும் த்வயத்தையும் அநுஸந்தியாத கர்ப்பநிர்ப்பாக்யரென்கை. (௧௧)

இது உத்க்ராந்திபர்வத்தில் பாட்டு. (உறையிட்டவித்யாதி) இது ப்ரபன்னரை ஸர்வேஶ்வரன் பரமபதத்தேறக்கொண்டுபோவான் சரீரத்தினின்றும் உத்க்ரமிப்பிக்கும்ப்ரகாரத்தைச்சொல்லுகிறது. உறைவிட்டவாளென - உறையிலிட்டுவைத்தவாள்போல், அதாவது தன்னுள்ளே நிர்மலனாய் புறம்பேயழுக்குடம்பாலாவரிக்கப்பட்டிருக்கை, ஊனுள

இப்படி முன்பு பண்ணின வ்யஸநங்களுக்கெல்லாம் தத்தத திகாராநுகுணமாக ப்ரபத்த்யாதி ப்ராயச்சித்தம்பண்ணி மேல் வ்யஸநங்களில் முயலாதபடி உள்ளமுறை செயலுள்ள விவ்மூன்றையுமுள்ளிக்கெடுத்துக் குன்றமெடுத்த பிரானடியாரொடு மொன்றிநின்று நாட்டாரோடியல்வொழிந்து, ஸம்ஸாரிஸம்பந்தமான வஸிஷ்டாநுபவம் பெருமையாலே, வாய்க்கட்டுண்டு திருப்பாற்கடலிலே முழுகினவனைப்போலே, தன்னவஸ்தையைக்கண்டு இரக்கமனத்தோடெரியனை யரக்குமெழுகு மொத்துக் கரியநாழிகையூழியில் பெரியதாய், கங்குலும்பகலும் கண்டுயிலறியாதே, என்சொல்லியுய்வனிங்கவனை விட்டென்னும்படி ஸம்ஸாரத்திலடி தெரியாதே, மருளொழிந்து மங்கவொட்டென்மாமாயை மாயஞ் செய்யேலென்று வளைத்து, ப்ரபத்திவாக்யோச்சாரணமே ப்ரஸ்தாநஸம்வாதமாம்படி அவாவற்று வீடுபெறுமதிகாரிக்கு வைத்த நாள்வரையெல்லைகுறுகி மோக்ஷஸாஸ்த்ரங்களிற்சொல்லும் ஸூர்யாவஸாநங்களாலும் சுதிஸந்தோஷத்தையுண்டாக்கி, ஒன்பது வாசல் தானுடைக்குடம்பை பிரியும்போது உத்தராயணம் தக்ஷிணாயநம் சுக்லபக்ஷம் க்ருஷ்ணபக்ஷம் பகலிரவு ப்ரஸ்தாப்ரஸ்தவிஷேஷவிசேஷ நிர்த்தவிசேஷங்களென்கிற வாசியற சரணமாகத்தன் தாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால். இருள் தருமா

றைகின்றயோகிகளை - ஊன் - மாம்ஸம். மாம்ஸமயமான சரீரத்துக்குள்ளே வஸித்து பக்திப்ரபத்திகளாகிற அஷ்டாங்கயோகங்களையுடைய பக்தரையும் ப்ரபந்நரையும், (நறுமட்டித்யாதி.) நறு - நாற்றம், மட்டு - மது, இரண்டும், ஒழிவற்ற - அவிச்சிந்நமாய் வர்த்திக்கிற, ஸத்பரிமள மதுஸ்யந்தியான, நற்றுளவு-சாற்றுப்படிகளிலே விலக்ஷணமான திருத்துழாய், அதனை, ஏந்திய - தரிக்கின்ற, நாயகனார் - ஸர்வேஶ்வரன், நிறைமட்டிலாத, நிறை - பூர்த்தி, மட்டு- அவதி, அதில்லாத, நிரவதிகபரிபூர்த்தியையுடைய, நெடும்பயன் -நிரவதிகபலம், பரிபூர்ணப்ரஹ்மாநுபவகைங்கர்யங்களை, காட்டினைத்து-பரமபதத்தேறக்கொண்டுபோயநுபவிப்பிக்க ஸங்கல்பித்து, உடலச்சிறைவெட்டி விட்டு - ஸ்தூலசரீரமாகிற சிறையை வெட்டிக்கழித்து, இச்சரீரத்தினின்றும் உத்க்ரமிப்பித்தென்றபடி. வழிப்படுத்தும் - அர்ச்சிராதிமார்க்கத்தில் செலுத்தும்ப்ரகாரத்தை, செப்புவம் - சொல்லுவோமென்கை. (கஉ)

ஞாலத்துளிப்பிறவி வேண்டாதபடி வைகுந்தங்கொடுக்கும்பிரான், இவனுக்கு அடியிலே அஶ்லேஷவிநாஶவ்யபதேஶ விஷயங்களாய்க்கொண்டு மாறநிணைப்பிட்டுக்கிடந்த உத்தரபூர்வாகரூப பாவங்களை மாற்றி, “ப்ரியேஷு ஸ்வேஷு ஸுக்ருதமப்ரியேஷு ச துஷ்க்ருதம்” இத்யாதிகளின்படியே “நாட்டிலுள்ள பாவமெல்லாம்சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே” என்னும்படி அநுகூலப்ரதிகூலருடைய ஆநுகூல்யப்ராதிகூல்யங்களுக்கும் பலங்கொடுத்து சாமிடத்தென்னைக் குறிக்கொள்கண்டாய், அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேனென்றும், அவன் க்ருபாவிஶேஷத்தாலே “யம் யோகிந: ப்ராணவியோககாலே யத்நேந சித்தே விநிவேஶயந்தி” என்னுமவஸ்தையில்லையாய் காஷ்டபாஷாணஸந்நிபனாய்க்கிடக்கிலும் “அஹம் ஸ்மராமி” என்கிறபடியே தன்னினைவை இவனுக்கு நினைவாக்கி, “கேவலம் மதீயயைவ தயயா அதிப்ரபுத்த:” என்கிறபடியே ஸ்வயமாக ஸ்வவிஷயத்தில் வெளிச்செறிப்பாலே ஸர்வபூதஸாதாரண ஸங்கல்பாநுஸாரமாம்படி ப்ரஹ்மருத்ராதிகளுக்குப் போலே அதிகாரநிரபேக்ஷமாகத்தானே உத்க்ரமணநிமித்தமாகநின்று, பாஹ்யேந்த்ரியங்கள் பத்தையும் மனஸ்ஸிலும், இவற்றோடே கூடின மனஸ்ஸை ப்ராணவாயுவிலும், இந்த்ரியங்கள் பதினொன்றோடுங்கூடின ப்ராணனை ஜீவாத்மாவிலுமிப்படி சேர்ந்ததிரளை இஶ்ஶரீரைகதேஶமான ஸூக்ஷ்மபூதங்களிலும், இவையெல்லாவற்றையுங்கூட ஹ்ருதயஸ்தனை தன் பக்கலிலே சேர்த்து இவனை இளைப்பாற்றி, இப்படிப்பொதுவான உத்க்ராந்திக்ரமம் நடந்தால் முமுக்ஷுவான இவனை லோகாந்தரங்களுக்கும் வழிகளான ஹ்ருதயநாடி நூற்றிலும் ப்ரவேசிப்பியாதே, ஸுஷும்நையென்றும் ப்ரஹ்மநாடி என்றும் மூர்த்தந்யநாடி என்றும் பேர்பெற்ற ஹ்ருதயமுக்யநாடியில் [illegible]மான த்வாரம்வெளிச்செறிக்கப்பண்ணி, அதிலே ப்ராணேந்த்ரியஸம்யுக்தஸூக்ஷ்மஶரீரத்தோடேகூட ப்ரவேசிப்பித்து, ஹ்ருத்கோஶ[illegible]தமாய்க்

கொண்டு அவலம்பிக்கிற ஹ்ருதயாந்தரீக்ஷத்திலே ஸூக்ஷ்ம ஸுஷிரத்தினின்றும் மேலே கொண்டேறி ஸதநாடிப்ரஸாரமான ப்ரஹ்மத்வாரமென்று பேர்பெற்ற மூர்த்தந்யஸுஷிரத்தில் ப்ரஹ்மரந்த்ரமென்கிற தலைவாசலைத் திறந்துகொண்டு புறப்பட்டு நாடிகளோடே சங்கிலித்துவக்குப் போலே பிணைத்துவைத்த ஸூர்யகிரணங்களை அவலம்பமாக்கி வைகுந்தம்புக வழிப்படுத்தும்.

